


தினப்புயல்
PTN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




## இன்று மூலோபாய பேச்சுவார்த்தை



இலங்கைக்கும் ஐக்கிய இராச்சியத்துக்கும் இடையில் இன்று (18) மூலோபாய பேச்சுவார்த்தையொன்று இடம்பெறவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. லண்டனில் உள்ள வெளிநாட்டு பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் வெளிவிவகார செயலாளர் அருணி விஜேவர்தன பங்கேற்கவுள்ளார்.

ஐக்கிய இராச்சியத்திற்கும் இலங்கைக்கும் இடையில் வெளிவிவகார செயலாளர் மட்டத்தில் இடம்பெறும் முதலாவது மூலோபாய உரையாடல் இதுவாகும் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. இலங்கைக்கும் ஐக்கிய இராச்சியத்திற்கும் இடையில் இராஜதந்திர உறவுகள் ஸ்தாபிக்கப்பட்ட 75 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி இந்த பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது. இந்த மூலோபாய உரையாடலின் மூலம், இரு நாடுகளுக்கும் இடையிலான பன்முக உறவுகள் குறித்து விவாதிக்க இரு தரப்பினருக்கும் ஒரு தளம் கிடைக்கும் என்றும் அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

## சுகாதாரத்துறை எதிர்நோக்கும் சவால்கள் குறித்து கல்முனையில் விசேட கலந்துரையாடல்



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிரிவு தலைவர்களுக்கான கலந்துரையாடல் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் தலைமையில் திங்கட்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன்போது தற்போது நாட்டில் இருந்து அதிகமான சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் வெளிநாடு செல்வது கல்முனை பிராந்தியத்தையும் பாதித்துள்ளது. அதேபோன்று சம்பளமற்ற விடுமுறையில் வெளிநாட்டு உள்நாட்டு வேலை வாய்ப்புகளுக்காக மருத்துவத்துறை சார்ந்த உத்தியோகத்தர்கள் ஏனைய சுகாதார உத்தியோகத்தர்கள் விடுமுறை பெறுவதனாலேயே இவ்வாறான சிக்கல்கள் ஏற்படுகிறது என்பது தொடர்பிலான விடயங்கள் கலந்துரையாடப்பட்டது.

மேலும், இந் நிலைமையை சமாளிப்பதற்கும் நோயாளிகளை வேறு மாகாணங்களுக்கு சிகிச்சைகளுக்காக அனுப்புவதில் உள்ள சவால்கள் மற்றும் பிராந்தியத்தில் அதிகரித்துள்ள தரமற்ற உணவு விநியோகம், வைத்திய ஆலோசனை இன்றி தனியார் மருந்தகங்களினால் மருந்துகள் விநியோகம், ஆக்சிஜன் சிலிண்டர்களை அண்மையில் உள்ள வைத்தியசாலைகளில் இருந்து பெறுதல், இரத்த மற்றும் ஏனைய மாதிரிகளை தபால் மூலமாக அனுப்பி வைப்பதன் மூலம் செலவுகளை பாரியளவில் குறைத்தல் தொடர்பிலும் மீன்களுக்கு அசுத்தமான மண்ணை கலத்தல் மற்றும் உணவகங்களின் தரம் தொடர்பில் நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. **(நூருல் ஹுதா உமர்)**

## திரிபுராவில் பாடசாலைகளுக்கு விடுமுறை

இந்தியாவில் கோடை வெப்பத்தின் தாக்கம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. பகல் நேரங்களில் நிலவும் வெப்ப அலை காரணமாக மக்கள் வீட்டை விட்டு வெளியே வர தயங்குகின்றனர். இதற்கிடையே, இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் வெப்பநிலை அடுத்த சில நாட்களுக்கு இயல்பை விட 2 முதல் 4 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்கும் என்று இந்திய வானிலை ஆய்வுமையம் தெரிவித்து இருந்தது.

இந்நிலையில், திரிபுரா மாநிலத்தில் வெப்பத்தின் தாக்கம் நாளுக்கு நாள் உயர்ந்து காணப்படுகிறது. கடும் வெயில் எதிரொலியாக திரிபுராவில் உள்ள அனைத்து அரசு பள்ளிகளுக்கும் நாளை முதல் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. இன்று முதல் ஏப்.23 ஆம் திகதி வரை பள்ளிகள் மூடப்படுகிறது என அம்மாநில அரசு அறிவித்துள்ளது. ஏற்கனவே, மேற்கு வங்காளம் உள்ளிட்ட சில மாநிலங்களில் வெப்ப அலை காரணமாக கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## மே 01ஆம் திகதி முதல் குறைந்த விலையில் முட்டை விநியோகம்



மே மாதம் முதலாம் திகதி முதல் கட்டுப்பாட்டு விலையை விட குறைந்த விலையில் நுகர்வோருக்கு முட்டைகளை வழங்கவுள்ளதாக அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. எவ்வாறாயினும், அன்றைய தினம் வரை கட்டுப்பாட்டு விலையில் முட்டைகளை விற்பனை செய்வது கடினம் என அதன் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

"நாங்கள் விலையை குறைத்தபோது, தேவைக்கு ஏற்ப, வியாபாரிகள் வந்து 46-47 ரூபாய்க்கு முட்டைகளை வா ங்குகிறார்கள். அதை எங்களால் தடுக்க முடியாது. சமீப காலமாக எம் மீ து அபராதம் விதிக்கப்பட்டது. எனினும் நுகர்வோர் அதிகார சபைக்கு இதுவரை முட்டையின் விலையை கட்டுப்பாட்டு விலைக்கு கீழ் கொண்டு வர முடியவில்லை. காரணம் கேள்வி மற்றும் வழங்கலுக்கு காணப்படும் தட் டுப்பாடு. நுகர்வோர் அதிகார சபை இந்த விவசாயியை சுமார் 8 மாதங்கள் துன்புறுத்தியது என்று நினைக்கிறேன். மே 1 வரை வாடிக்கையாளர்களுக்கு முட் டைகளை 50 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்ய அனுமதிக்கவும். எந் த பிரச்சினையும் இல்லை. மே 1-ம் திகதிக்குப் பிறகு, முட்டையை கட்டுப் பாட்டு விலைக்குக் கீழே விற்பனை செய்ய நடவடிக்கை எடுப்போம்" எனத் தெரிவித்தார்.

## கொத்மலை ஓயாவில் இறந்து மிதக்கும் மீன்கள் - உணவுக்கு எடுக்கவேண்டாம்



கொத்மலை ஓயாவில் மீன்கள் இறந்த நிலையில் மிதப்பதாகவும், அவற்றை உணவுக்காக எடுக்க வேண்டாம் எனவும் நுவரெலியா மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் கோரிக்கை விடுத்துள்ளார். அம்பேவெல முதல் மெரயா, எல்ஜின், அக்கரகந்த வரையான ஆற்றில் சுமார் 12 கிலோ மீற்றர் வரை மீன்கள் மர்மமான முறையில் இறந்து மிதக்கின்றன.

இந்நிலையில் ஆற்றின் இரு கரைகளிலும் வசிக்கும் பிரதேசவாசிகளும், தோட்டத் தொழிலாளர்களும் இறந்த மீன்களை எடுத்துச்செல்கின்றனர் என தெரியவந்துள்ளது. இவ்வாறு இறந்த மீன்களை உணவுக்காக பயன்படுத்த வேண்டாம் என நுவரெலியா மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் நிஷங்க விஜேவர்தன கோரிக்கை விடுத்துள்ளார். மீன்கள் திடீரென உயிரிழந்துள்ள சம்பவம் தொடர்பில் ஆராய்வதற்காக அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். கொத்மலை ஓயாவில் மீன்கள் திடீரென உயிரிழந்தமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், நீர் மாதிரிகள் மற்றும் இறந்த மீன்களுள் சில பரிசோதனைக்காக பேராதனை கன்னோருவையில் உள்ள பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தலவாக்கலை கால்நடை வைத்தியர் சுரேஷ் குமார் தெரிவித்தார்.

## தேசிய அரசாங்கத்திற்கு ஜனாதிபதி அழைப்பு



தேசிய அரசாங்கத்திற்கான அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு தாம் உட்பட பல கட்சி பிரதிநிதிகளை ஜனாதிபதி ஏற்கனவே அழைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன் பிரகாரம், இது தொடர்பில் கலந்துரையாடி தீர்மானம் எடுப்பார் என எதிர்ப்பார்ப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். இதற்கிடையில் தேர்தலை இலக்கு வைத்து அரசாங்கத்தை பலப்படுத்தும் நோக்கில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பல்வேறு தந்திரோபாயங்களின் ஊடாக அரசாங்கத்துடன் இணைந்துகொள்ள செயற்பட்டு வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

# சூடானில் தொடரும் வன்முறை - 185 பேர் பலி



இராணுவ ஆட்சி நடந்து வரும் சூடானில் இராணுவத்துக்கு எதிரான நடவடிக்கைகளில், ஆர்எஸ்எப் என்ற துணை இராணுவ படையே ஈடுபட்டு வருகிறது. தலைநகரான கார்டோமில் உள்ள ஜனாதிபதி மாளிகை மற்றும் சர்வதேச விமான நிலையத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாக நேற்று முன்தினம் துணை இராணுவ படை அறிவித்தது.

இதனால் கார்டோமில் இராணுவத்துக்கும், துணை இராணுவ படையினருக்கும் இடையே கடும் சண்டை மூண்டது. அதன்பின், இது நாடு முழுவதும் கலவரமாக வெடித்தது. இதில் ஒரு இந்தியர் உள்பட 56 பேர் பலியானதாக தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில், சூடானில் வன்முறை சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. தலைநகர் கார்டோம் உள்பட பல்வேறு நகரங்களில் துப்பாக்கிச் சூடு, குண்டு வீச்சு போன்ற சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன. இதனால் கலவரத்தில் பலியானோர் எண்ணிக்கை 185 ஆக அதிகரித்துள்ளது. இதுவரை 185 பேர் உயிரிழந்ததாகவும், 1,800 க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால் சூடானில் பொதுமக்கள் மிகுந்த அச்சத்தில் உள்ளனர்.

# ரத்தாகும் அரை சொகுசு பேருந்துகள்



அரை சொகுசு பேருந்துகள் அடுத்த மாதத்தின் பின்னர் ரத்து செய்யப்படும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அரை சொகுசு பேருந்துகள் தொடர்பில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாக அதன் பணிப்பாளர் நாயகம் நிலான் மிராண்டா குறிப்பிட்டார். போக்குவரத்து அமைச்சின் அறிவுறுத்தலின்படி அரை சொகுசு சேவையை சாதாரண சேவையாகவும், சொகுசு சேவையாகவும் மாற்ற நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, அனைத்து பேருந்து உரிமையாளர்களும் தங்களது பேருந்தை சாதாரண சேவையாகவோ அல்லது சொகுசு சேவையாகவோ மாற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இந்த நடைமுறையை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் சந்தேகம் இருப்பதாக இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

# மும்பை - ஐதராபாத் : இன்று மோதல்



10 அணிகள் பங்கேற்றுள்ள 16-வது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இந்த கிரிக்கெட் திருவிழாவில் இன்று இரவு 7.30 மணிக்கு நடைபெறும் 25-வது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணி, ஐதராபாத் சன்ரைசர்ஸ் அணியுடன் மோதுகிறது. முன்னாள் சாம்பியனான ஐதராபாத் அணி இதுவரை 4 ஆட்டங்களில் விளையாடி அதில் 2-ல் வெற்றியும் (பஞ்சாப், கொல்கத்தாவுக்கு எதிராக), 2-ல் தோல்வியும் (லக்னோ, ராஜஸ்தானுக்கு எதிராக) கண்டுள்ளது.

முந்தைய கொல்கத்தாவுக்கு எதிரான ஆட்டத்தில் 228 ரன்கள் குவித்து வெற்றி பெற்றதும், அதில் ஹாரி புரூக் சதம் அடித்ததும் ஐதராபாத்துக்கு கூடுதல் நம்பிக்கையை தந்துள்ளது. கேப்டன் மார்க்ரம், அபிஷேக் ஷர்மாவும் அந்த ஆட்டத்தில் நன்றாக ஆடினர். பந்து வீச்சில் வேகப்பந்து வீச்சாளர்கள் மார்கோ யான்சென், உம்ரான் மாலிக், புவனேஷ்வர்குமார், சுழற்பந்து வீச்சாளர் மயங்க் மார்கண்டே கைகொடுக்கிறார்கள்.

அத்துடன் உள்ளூர் ரசிகர்கள் மத்தியில் விளையாடுவது ஐதராபாத்துக்கு உற்சாகமளிக்கும். தொடக்க இரு ஆட்டங்களில் பெங்களூரு, சென்னையிடம் அடி வாங்கிய 5 முறை சாம்பியனான மும்பை இந்தியன்ஸ் அதன் பிறகு டெல்லி, கொல்கத்தா அணிகளை தோற்கடித்தது. இப்போது "ஹாட்ரிக்" வெற்றிக்கு குறி வைத்து களம் காணுகிறது. முதல் 3 ஆட்டங்களில் சொதப்பிய சூர்யகுமார் யாதவ் கொல்கத்தாவுக்கு எதிரான கடந்த ஆட்டத்தில் 43 ரன்கள் எடுத்து ஒரு வழியாக பார்முக்கு திரும்பினார். இதே போல் இஷான் கிஷன், கேப்டன் ரோகித் சர்மா, திலக் வர்மாவும் சிறப்பாக விளையாடுகிறார்கள். பந்து வீச்சில் சுழற்பந்து வீச்சாளர் பியுஷ் சாவ்லா சிக்கனமாக (ஓவருக்கு சராசரி 6.25 ரன்) பந்துவீசி கலக்குகிறார்.

ஆனால் மற்ற பவுலர்களின் பந்துவீச்சு சீராக இல்லை. எனவே பந்துவீச்சில் முன்னேற்றம் காண வேண்டியது அவசியமாகும். கடந்த ஆட்டத்தில் முதல்முறையாக களம் இறங்கிய சச்சின் டெண்டுல்கரின் மகன் அர்ஜூன் 2 ஓவர் பந்துவீசி 17 ரன்கள் விட்டுக்கொடுத்தார். விக்கெட் வீழ்த்தவில்லை. இன்றைய ஆட்டத்தில் அவருக்கு வாய்ப்பு வழங்கப்படுவது சந்தேகம் தான். மொத்தத்தில் ஒரே மாதிரியான பலத்துடன் மல்லுக்கட்டும் இவ்விரு அணிகளில் யாருடைய கை ஓங்கும் என்பதை கணிப்பது கடினமாகும்.

# வளர்ந்துவரும் நாடுகளில் அதிகளவில் பரவும் புற்றுநோய்




புற்றுநோய் தற்போது பெரும் சவாலாக மாறி வருகிறது. எந்த வயதினரையும் தாக்கும் வாய்ப்பு அதிகரிக்கிறது. புற்றுநோய் காரணமாக சுமார் 13 சதவீதம் மனித உயிரிழப்பு ஏற்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் புதிதாக 14.1 மில்லியன் மக்கள் இந்த நோயால் தாக்கப்படுகின்றனர்.

இவற்றில், 8.8 மில்லியன் இறப்பதாக புள்ளி விவரங்கள் கூறுகின்றன. நுரையீரல் புற்றுநோய், முன்னிற்குஞ்சுரப்பி புற்றுநோய், பெருங்குடல் மலகுடலுக்குரிய புற்று நோய், வயிற்றுப் புற்றுநோய் (இரைப்பைப் புற்றுநோய்) பெண்களில் மார்பகப் புற்றுநோய், கருப்பப்பை வாய்ப் புற்றுநோய், பெருங்குடல் மலகுடலுக்குரிய புற்று நோய், நுரையீரல் புற்றுநோய் என பலவகை உள்ளன. குழந்தைகளையும் புற்றுநோய் விட்டு வைப்பதில்லை. 2012-ம் ஆண்டில், 165,000 எண்ணிக்கையான 15 வயதுக்குட்பட்ட குழந்தைகள் புற்று நோயால் பாதிக்கப்பட்டனர்.

வளர்ந்து வரும் நாடுகளில் புற்று நோய் அதிகளவில் பரவுகிறது. உடலின் ஒரு பகுதியில் உருவாகும் புற்றுநோய் மற்ற பகுதிகளுக்கும் பரவி நோயாளியின் நிலையை சிக்கலாக்குகிறது. அத்தகையவர்களுக்கு சிகிச்சை அளிப்பதும் கடினம். இந்நிலைதான் பெரும்பாலான புற்றுநோய் இறப்புகளுக்கு காரணம். கட்டி செல்கள் ரத்த ஓட்டத்தில் இருந்து வெளியேறி மற்ற உறுப்புகளுக்கு பரவுகின்றன. இதனை தடுக்க அமெரிக்க, பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் புதிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர்.

அமெரிக்காவின் மசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனம் (எம்ஐடி) மற்றும் பிரிட்டனில் உள்ள யுனிவர்சிட்டி காலேஜ் லண்டன் விஞ்ஞானிகள் மெட்டாஸ்டாசிஸின் வழிமுறைகளை ஆழமாக ஆராய்ச்சி செய்தனர். முதன்முறையாக, விஞ்ஞானிகள் புற்றுநோய் செல்கள் உறுப்புகளில் ஊடுருவும் முறையை விரிவாக கண்டுபிடித்தனர். புற்றுநோயானது உடலின் மற்ற பகுதிகளுக்கு பரவுவதைத் தடுக்கும் நோக்கில் ஆராய்ச்சி மேற்கொண்டனர். புதிய மருந்துகள் தயாரிக்க இந்த ஆராய்ச்சி வழிவகை செய்யப்படும் என்றும் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

உடலில் ஒரு இடத்தில் புற்றுநோய் தொடங்குகிறது. அங்கிருந்து கட்டி செல்கள் உடைந்து, ரத்த ஓட்டம் அல்லது நிணநீர் மண்டலத்தின் மூலம் உடலின் மற்ற பகுதிகளுக்கு பரவுகிறது. இது மெட்டாஸ்டாஸிஸ் என்று அழைக்கப்படுகிறது. இதன் விளைவாக மற்ற உறுப்புகளில் 2-ம் நிலை கட்டிகள் உருவாகின்றன. புற்றுநோய் செல்கள் ரத்த ஓட்டத்தில் அல்லது நிணநீர் மண்டலத்தில் நுழைவதற்கு முன்பு முதன்மைக் கட்டியிலிருந்து பிரிந்து செல்ல வேண்டும்.

கட்டி பெரிதாகி, அருகில் உள்ள திசு, நிணநீர், ரத்த நாளங்களில் பரவும் போது அந்த செல்கள்தான் முதன்மையான தளமாக அமைகிறது. புற்றுநோய் பரவலை தடுக்க விஞ்ஞானிகள் அதன் முன்மாதிரியை ஆய்வகத்தில் உருவாக்கியுள்ளனர். ரத்த ஓட்டத்திற்கும் உடலின் மற்ற பகுதிகளுக்கும் இடையில் எண்டோடெலியம் எனப்படும் ஒரு அடுக்கு உள்ளது. விஞ்ஞானிகள் இதை முன்மாதிரியாகக் கொண்டுள்ளனர்.

ரத்த ஓட்டத்தில் உள்ள கட்டி செல்கள் தேர்ச்சி பெறுவதற்கு எண்டோபிலியா சிகிச்சை முறையை முதலில் கடைபிடிக்க வேண்டும் என்பதை விஞ்ஞானிகள் அங்கீகரித்துள்ளனர். "சேற்றில் சிக்கிக் கொண்டால், வெளியே வருவதற்கு கல் போன்ற சுவர் வேண்டும். புற்றுநோய் செல்கள், எண்டோடெலியத்தில் இருந்து வெளியேறி, மற்ற சுவர்களில் பரவுவதையே தடுக்க முடியும் என தெரிவித்துள்ளனர்.

உடலில் உள்ள திசுக்களில் அதிக நுண்துளைகள் உள்ளன. மென்மையானதாக இருப்பதால் மேலும் வேகமாக புற்றுநோய் செல்கள் ஊடுருவ முடியும் என்று ஏற்கனவே நிரூபிக்கப்பட்டுள்ளது. உடலில் உள்ள குறிப்பிட்ட திசுக்களின் புதிய வேதியியல் பண்புகள் 2-ம் நிலை கட்டிகள் எங்கு உருவாகின்றன என்பதை தீர்மானிக்க முடியுமா என்ற கேள்வியை இந்த ஆராய்ச்சி எழுப்பியுள்ளது. மனித திசுக்களில் மெட்டாஸ்டாசிஸை கண்டுபிடிப்பது மிகவும் கடினம். இந்த ஆராய்ச்சி மூலம் உடலில் புற்றுநோய் பரவலை தடுக்க முடியுமா? எனவும் மருத்துவ வல்லுனர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

# சித்தார்த் பிறந்தநாள் : டக்கர் பட டிரைலரை வெளியிட்ட படக்குழு



தென்னிந்திய திரையுலகின் முன்னணி நடிகராக வலம் வரும் சித்தார்த், தற்போது நடித்துள்ள படம் "டக்கர்". இப்படத்தை கார்த்திக் ஜி கிரிஷ் இயக்கியுள்ளார்.

சித்தார்த்துக்கு ஜோடியாக நடிகை திவ்யான்ஷா கௌஷிக் நடித்துள்ளார். இதில் யோகிபாபு, அபிமன்யூ சிங், முனிஷ்காந்த், ஆர்ஜே விக்னேஷ்காந்த் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

இப்படத்தை பேஷன் ஸ்டுடியோஸ் சார்பில் சுதன் மற்றும் ஜெயராம் தயாரித்துள்ளனர். இந்நிலையில் நடிகர் சித்தார்த்தின் பிறந்தநாளை முன்னிட்டு டக்கர் படத்தின் டீசரை படக்குழு வெளியிட்டு ரசிகர்களை உற்சாகப்படுத்தியுள்ளது.

மேலும் இப்படம் வருகிற மே 26ம் திகதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த டீசரை ரசிகர்கள் பலரும் வைரலாக்கி வருகின்றனர்.